## November 1, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கோவாவில் நடைபெறும் ஃபிடே உலகக் கோப்பை செஸ் போட்டியின் சாம்பியன் கோப்பை அறிமுகம் செய்யப்பட்டது. இந்திய செஸ் நட்சத்திரம் விஸ்வநாதன் ஆனந்தை கௌரவிக்கும் வகையில், அந்தக் கோப்பைக்கு அவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
   i. 11-ஆவது செஸ் உலகக் கோப்பை போட்டியின் ஆட்டங்கள், கோவாவில் சனிக்கிழமை (நவ. 1) தொடங்கி, வரும் 27-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது.

2. பஹ்ரைனில் நடைபெற்ற 3-ஆவது ஆசிய யூத் விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா 13 தங்கம், 18 வெள்ளி, 17 வெண்கலம் என 48 பதக்கங்கள் வென்று, 6- ஆம் இடத்துடன் நிறைவு செய்தது.

3. இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் கோல் கீப்பர் மேனுவல் ஃப்ரெடரிக் (78) உடல் நலக் குறைவால் பெங்களூரில் காலமானார். அவர், 1972 மியுனிக் ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய அணியில் அங்கம் வகித்தவராவார்.

4. இந்தியா-அமெரிக்கா இடையே 10 ஆண்டு பாதுகாப்பு ஒப்பந்தம் கையொப்பமானது.
   i. மலேசிய தலைநகர் கோலா லம்பூரில் நவ.1-ஆம் தேதி நடைபெறும் ஆசியான் உறுப்பு நாடுகள் மற்றும் ஒத்துழைப்பு நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் சென்றுள்ளார். அங்கு அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட்டர் ஹெக்செத்துடன் அவர் மேற்கொண்ட ஆலோசனைக்குப் பிறகு இந்த ஒப்பந்தம் கையொப்பமானது.
   ii. ரஷிய கச்சா எண்ணெய்யை அதிக அளவு இறக்குமதி செய்வதாக கூறி இந்தியா மீது 50 சதவீத கூடுதல் வரியை அமெரிக்கா விதித்ததைத் தொடர்ந்து இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டது. இதை மறுசீரமைக்கும் முயற்சியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

5. சமூக சீர்திருத்தவாதி சுவாமி தயானந்த சரஸ்வதியால் உருவாக்கப்பட்ட ஆர்ய சமாஜம் அமைப்பு இந்தியாவின் வேதபாரம்பரியத்தைக் பாதுகாத்ததாக பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.
   i. ஆர்ய சமாஜம் அமைப்பு உருவாக்கப்பட்டதன் 150-ஆவது ஆண்டு தினம் மற்றும் தயானந்த சரஸ்வதியின் 200ஆவது பிறந்த தினத்தையொட்டி தில்லியில் சர்வதேச ஆர்ய சம்மேளனம் என்ற தலைப்பிலான 4 நாள் நிகழ்ச்சி தொடங்கியது.
   ii. ஆர்ய சமாஜம் அமைப்பு சமூக சீர்திருத்தங்களை முன்னெடுத்ததுடன் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட பல்வேறு தியாகிகளுக்கும் ஊக் கமளித்தது. லாலா லஜபதி ராய், ராம் பிரசாத் பிஸ்மில் உள்ளிட்ட தலைவர்களுக்கு ஆதர்சசக்தியாக இந்த அமைப்பு விளங்கியது.

6. ‘ஜென் இசட்' எனப்படும் 1990-ஆம் ஆண்டு முதல் 2010-வரையில் பிறந்த இளைஞர்கள் ராணுவத்தில் அதிகமாக உள்ளனர் என்றும் அவர்கள் தான் இந்தியாவின் மிகப்பெரிய சக்தி என்றும் ராணுவத் தலைமை தளபதி உபேந்திர துவிவேதி தெரிவித்தார்.
   i. நாட்டின் முதல் துணைப் பிரதமர் சர்தார் வல்லபபாய் படேலின் 150-ஆவது பிறந்ததின நிகழ்வில் உபேந்திர துவிவேதி பங்கேற்று பேசியதாவது:
   ii. நேரடித் தொடர்பு இல்லாத வகையில் போரை எதிர்கொள்ளும் சூழல் தற்போது அதிகரித்து வருகிறது. ராணுவத் தளவாடங்களின் வலிமையைவிட தொழில்நுட்பதிறனின் வலிமையும் போர் சூழலில் தேவைப்படுகிறது.
   iii. அண்மையில் நடைபெற்ற ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இளம்

ராணுவ அதிகாரிகள் என்சிசி-யினர் உள்ளிட்டோர் சிவில் பாதுகாப்பு, ட்ரோன் ஆய்வகம், சமூக ஊடக பாதுகாக்கும் பணி ஆகியவற்றில் பணியாற்றினர்.

iv. இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 65 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் 35 வயதுக்குட்பட்டவர்களாக உள்ளனர். இந்தியா இளைஞர்களின் தேசமாகத் திகழ்கிறது. இளைஞர்களின் எல்லையில்லா பலம், படைப்பாற்றல், துணிவு அடங்கிய கொண்ட மனித ஆற்றல், இந்தியாவை பலம் பொருந்திய

v. நாடாகமாற்றியுள்ளது.

vi. 'ஜென் இசட்' இளைஞர்கள் அதிகம் கொண்ட நாடாக இந்தியா உள்ளது. உலக நாடுகளின் ராணுவ பலத்தில் இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ள போதும், இந்திய ராணுவத்தில் 'ஜென் இசட்' வீரர்களின்எண் ணிக்கை முதலிடத்தில் உள்ளது.

7. அமெரிக்க வரிவிதிப்பு காரணமாக 2025, ஜனவரி- செப்டம்பர் காலகட்டத்தில் பிற நாடுகளுக்கான இந்திய ஏற்றுமதி அதிகரித்ததாக மத்திய வர்த்தக அமைச்சகத்தின் தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

i. குறிப்பாக ஐக்கிய அரபு அமீரகம், வியத்நாம், பெல்ஜியம் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு ஆபரணங்கள், ரத்தினங்கள், ஜவுளி மற்றும் கடல்சார் பொருள்கள் முதலியவை ஏற்றுமதி செய்யப்படுவது அதிகரித்துள்ளது.

ii. கடல்சார் பொருள்கள்:

iii. ரூ.12,700 கோடி மதிப்புடன் இந்தியாவில் இருந்து அதிகப்படியான கடல்சார் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படும் நாடாக அமெரிக்கா தொடர்ந்து வருகிறது. வியத்நாம் (100.4 சதவீதம்), பெல்ஜியம் (73 சதவீதம்) மற்றும் தாய்லாந்து (54.4 சதவீதம்) ஆகிய நாடுகளுக்கு இந்திய கடல்சார் பொருள்களின் ஏற்றுமதி பன்மடங்கு அதிகரித்து வருகிறது.

iv. அதேபோல் ஆசியாவில் சீனா (9.8 சதவீதம்), மலேசியா (64.2 சதவீ தம்) மற்றும் ஜப்பான் (10.9 சதவீதம்) ஆகிய நாடுகளுக்கும் குறிப்பிடத்தக்க அளவில் இந்திய ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

v. ஜவுளி: அதிகபட்சமாக ஐக்கிய அரபு அமீரகத் துக்கான ஜவுளி ஏற்றுமதி 8.6 சதவீதம் அதிகரித்துள்ளது. நெதர்லாந்து, போலந்து, ஸ்பெயின் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கும் இந்திய ஜவுளி ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

vi. ஆபரணங்கள் மற்றும் ரத்தினங்கள்: நிகழாண்டின் முதல் அரையாண்டில் இந்திய ஆபரணங்கள் மற்றும் ரத்தினங்கள் ஏற்றுமதி ரூ.2.01 லட்சம் கோடி மதிப்புடன் 1.24 சதவீதமாக உயர்ந்தது.

vii. அதிகபட்சமாக ஐக்கிய அமீரகத்துக்கான ஏற்றுமதி ரூ.17,128 கோடி மதிப்புடன் 37.7 சதவீதம் அதிகரித்துள்ளது. தென்கொரியா, சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளில் இந்திய ஆபரணங்கள், மெருகேற்றப்பட்ட / பட்டைதீட்டப்பட்ட வைரங்களுக்கான தேவை அதிகரித்து ஏற்று மதியும் உயர்ந்துள்ளது.

viii. சீனா மற்றும் மெக்ஸிகோ ஆகிய நாடுகளுக்கும் இந்திய ஆபரணங்களின் ஏற்றுமதி அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ix. இந்திய பொருள்களுக்கு கூடுதலாக 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்ததன் விளைவாக பிற நாடுகளுக்கு ஏற்றுமதி அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது என்றார்.

8. கல்வித் துறையில் தொடர்ந்து பங்களிப்பை செய்து வரும் இந்தியாவின் சேவை மகத்தானது என்று இலங்கை பிரதமரும் கல்வித் துறை அமைச்சருமான ஹரிணி

அமரசூர்யா தெரிவித்தார்.

i. இந்திய நிதி உதவியில் இலங்கை கட்டப்பட்ட பொலன்னறுவையில் மும்மொழிப் பள்ளிக் கட்டடத்தை இலங்கை பிரதமர் ஹரிணி அமரசூர்யாவும், இந்திய தூதர் சந்தோஷ் ஜாவும் திறந்து வைத்தனர்.
ii. இந்தப் பள்ளி கட்டத்தை கட்ட இந்தியா ரூ.32 கோடி (இலங்கை ரூபாய்) நிதி உதவி அளித்தது.
iii. இந்தியா - இலங்கை இடையே மேற்கொள்ளபட்டுள்ள மின்பகிர்வு திட்டம் குறித்து இருநாட்டு உயர் அதிகாரிகளும் இணையவழியில் ஆலோசனை நடத்தியதாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்தது.
iv. இதன் மூலம் இலங்கையில் மின் பற்றாக்குறை ஏற்படும்போதும் அந்நாடு இறக்குமதி செய்யவும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் பெறப்படும் மின்சாரத்தை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச்செலாவணி ஈட்டவும் உதவும்.

9. சென்னையை அடுத்த மறைமலைநகரில் வாகனங்களுக்கான என்ஜின் உற்பத்தியில் ஃபோர்டு நிறுவனம் மீண்டும் ஈடுபட உள்ளது. இதற்கான புரிந் துணர்வு ஒப்பந்தம் தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ் டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

i. ஃபோர்டு நிறுவனம் ரூ.3,250 கோடி முதலீட்டில் 600 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், வாகன என்ஜின் உற்பத்தித் திட்டத்தை மீண்டும் தொடங்கவுள்ளது.
ii. ஃபோர்டு நிறுவனத்தின் உலகளாவிய இயக்குநர் மார்ட்டின் எவரிட், துணைத் தலைவர் மாத்யூ கோடிலூஸ்கி.